## Buildings in the shape of English letters
## ஆங்கில எழுத்து வடிவ கட்டிடங்கள்

A, H, I, J, L, U, W ஆகிய ஆங்கில வடிவ எழுத்துக்கள் மாதிரியில் மிகுந்த கட்டிட உயர்தொழில்நுட்பத்தோடு கட்டிடங்கள் கட்ட முடியும். இந்த எழுத்தைக் கொண்டு பெயர் ஆரம்பிக்கும் நாடுகள், நிறுவனங்கள் தங்களின் மிகப்பெரிய செல்வம், அடையாளம், பெருமைகளைக் காண்பிப்பதற்கு மிகப்பெரிய அளவில் அவ்வடிவ கட்டிடங்களை அமைத்தால் பொருத்தமாக இருக்கும்.

## A low cost iron shelf
## குறைந்த செலவில் சிறிய இரும்பு பீரோ

பெரிய இரும்பு பேரலை நீளவாக்கில் 1 ¼ to 1 ½ அடி அகலத்திற்கு வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் ஒரு புறத்தில் மூன்று கீழ்களுடன் வெட்டிப்பட்ட பகுதியில் கதவு போல இணைத்து மறுபுறத்தில் தாழ்ப்பாள் அமைத்து வெல்டிங் அல்லது ஸ்குரு போடவும். பேரலின் உட்பகுதியில் இரண்டு தட்டுகளைப்போட்டு Shelfகளாக பிரித்துக் கொள்ளவும். பிறகு நல்ல முறையில் பெயிண்டிங் செய்யவும். ரூ. 500 செலவுக்குள் மிக வலிமையான இரும்பு பெட்டகம், பீரோ கிடைத்து விடும்.

## Requirement of a new service in public offices
## அலுவலகங்களில் வரவேண்டிய புதிய சேவை

பேங்க், அலுவலகங்கள் போன்ற இடங்களில் பொது மக்களின் விண்ணப்பம், பாரம் போன்றவற்றை பூர்த்தி செய்துக் கொடுப்பதற்கு அவர்களே தனி பணியாளர்களை அமைத்து தருவது சிறந்த சேவையாக அமையும். போதிய கல்வி இல்லாதவர்கள் மட்டுமின்றி நன்கு கற்றவர்களுக்கும் எப்போதாவது செய்ய வேண்டிய புதிய அலுவலகப்பணிகள் சற்று சிரமமானதே.

## An Easy Method to Develop Patriotism:
## தேசப்பற்றை வளர்ப்பதற்கு ஓர் எளிய வழி

ரேசன் கார்டு வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேசப்படம், கொடி, கீதம் மற்றும் நாம் இந்தியர்கள் என அனைத்தும் மிக அழகாக அச்சிடப்பட்ட, வீட்டில் மாட்டிக்கொள்ளக்கூடிய, அட்டைப்படத்தை அரசு வழங்க வேண்டும்.

இதை அடிக்கடி பார்க்கும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையான அனைவருக்கும் மனதில் தேசப்பற்று நன்கு பதிந்து கொண்டேயிருக்கும். இந்த உணர்வு ஆழமாக ஆக பல நன்மைகள் நடந்து மனித மனங்கள் சிறப்படையும்.

## For the easy improvement of intelligence
## அறிவை எளிதாக வளர்க்க

செல்போன், வாக்மேன், ஐ பேடு போன்றவைகளில் பாட்டு கேட்கும் பழக்கத்தோடு கூடவே அவற்றின் மூலம் நல்ல முன்னேற்ற தைத் தரும் பேச்சுகள், பாடங்கள், பொதுஅறிவு, ஆங்கில இலக்கணம், பொருள் போன்றவற்றைக் கேட்கும் வழக்கத்தைக் கொண்டு வர வேண்டும்.

## More Brightness of Electric Lights-Effects
## அதிக மின் விளக்கு ஒளி - விளைவு

அதிக சூரிய ஒளி நேராக உடலில் அதிக நேரம் படுவதால் எப்படி விளைவுகள் உண்டோ அதில் கால் பங்கு அளவிற்காவது இரவில் அதிக ஒளி வெள்ளத்தில் அதிக நேரம் இருக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. அது கண்ணின் சக்தி மற்றும் தோலின் இயற்கைத்தன்மையை, முகப்பொலிவை மெல்ல மெல்ல குறைத்து வரும். அதேநேரம் போதிய வெளிச்சமில்லாவிடினும் சரியானதல்ல. எனவே சரியான, தேவையான அளவு மின் விளக்கு ஒளியை மட்டும் பயன்படுத்தும் வழக்கம் வேண்டும்.

## To have fearless travel in auto & taxi
## ஆட்டோ, டாக்ஸிகளில் பயமில்லாமல் பயணம் செய்ய

ஆட்டோ, டாக்ஸிகளில் பெண்கள் தனியாகச் செல்லும்போது அதன் நம்பரை முக்கியமான உறவினர்/ நண்பர் ஒருவருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பி வைப்பது சிலருக்கு பயணத்தின் போது தேவையற்ற மன பயத்தைக் குறைத்து தைரியமாகப் பயணிக்க உதவும்.

## Carbage ditch is essential to drop excretions of cattle/pet animals
## கால்நடை–வீட்டுவிலங்கு கழிவுகளைப் போட குப்பைக் குழி அவசியம்

ஆடு, மாடு, கோழி, நாய் போன்ற வீட்டு விலங்குகளை வளர்ப்பவர்கள் அவற்றின் கழிவுகளைச் சாலைகளின் ஓரத்தில் போட்டு சுற்றுப்புற சீர்கேடு செய்கின்றனர். மேற்படி விலங்குகளை வளர்ப்பதற்கு வீட்டின் பின்புறம் கழிவு குப்பைக்குழி கட்டாயம் இருக்க வேண்டுமென்ற சட்டம் இருக்க வேண்டும். கழிவுப்பொருட்கள் வெளியில் போடுவோருக்குத் தண்டனைகள் தரவேண்டும்.

## Reduction of cell phone expense
## செல்போன் செலவு குறைப்பு

செல்போனில் ஒரு நிமிடத்திற்குப் பிறகு ஒரு செகண்ட் ஆனாலும் ஒரு நிமிடக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சில செல்போன் சேவை நிறுவனங்கள் மேலும் சில தந்திரங்களைக் கையாளுகின்றன. இதனால் பலருக்கு அடிக்கடி பணம் வீணாகிறது. இதற்கு செல் கனெக்ட் ஆனவுடன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு பேசினால் தேவையான நேர அளவுகளுக்குள் நிறுத்திக்கொள்ளலாம். சிக்கனமாக செல்போன் பேசும் ஆர்பலர்கள் கைகடிகாரத்தை உபயோகிக்கும் வழக்கத்தைக் கொள்ளலாமே.

## Changes reqiured in pasting of decorative paper
## அலங்கார பேப்பர் ஒட்டுவதில் மாற்றம் தேவை

ஒருசில மணி நேர விழாக்களுக்காக நிறைய மனித உழைப்பு, நேரம், பணம், கவனம் செலவு செய்து அலங்கார பேப்பர்கள்ஒ, கட்சி பேப்பர்கள், தோரணங்கள் ஒட்ட வேண்டியிருக்கிறது. இது ஒரு வகையில் பெரிய வீண்விரய வேலை. இதற்கு உடனடியாக வாங்கி, பலமுறைப் பயன்படுத்தும் வகையில் இதற்கான அலங்கார தோரணங்களைத் தயாரித்து விற்பனை செய்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். காலம் பொன் போன்றது. விரயமாக்காதீர், குப்பையாக்காதீர்.

## Easy Making of Color floor
## கலர்தரை போட எளிய முறை

கட்டுமானப் பணியில் தரைக்கு சிமெண்ட் போட்டு கலர் போட தற்போது கொத்தனார் செய்து வரும் கலர்கலவையைக் கரனையால் தேய்த்து விடும் நேரம் பிடிக்கும் வேலைக்கு பதிலாக நேரம், செலவு குறைந்த மாற்று உபாயத்தைச் செய்யலாம். அதாவது சிமெண்ட் போட்டு ஓரிரு மணி நேரத்திற்குப்பிறகு மேற்படி கலவையைச் சற்று கூடுதல் திரவமாக்கி பிரஷ்ஷால் மெல்லமாக அடித்துத் தடவலாம்.

## Easy handling of motorbike and reduce the fuel expence
## எளிதாக மோட்டார் சைக்கிளைக் கையாள, எரிபொருளைக் குறைக்க

இருசக்கர மோட்டார் வாகனத்தை செல்லும் திசையில் திருப்பி வைத்துக்கொண்டு சரியானத் தருணத்தில் ஸ்டார்ட் செய்து செல்வது எரிபொருள் செலவு மற்றும் விபத்தைக் குறைக்கும். பலரும் செல்ல வேண்டிய திசைக்கு எதிர் திசையில் நிற்கும் வாகனத்தை ஸ்டார்ட் செய்துகொண்டு முன்னும், பின்னும் நகர்த்தி திருப்பி பல சமயங்களில் இதைச் சிரமப்பட்டு செய்வதைக் காணமுடிகிறது. சில சமயங்களில் இதனால் வேறு வாகனங்கள் பாதசாரிகளுடன் மோதலும் நடக்கிறது.

## An impartant thing to the absent minded
## ஞாபகமறதிக்காரர்களுக்கு அவசியமானது

ஞாபகமறதிக்காரர்கள் அனைவரும் அவசியம் ஒரு சிறுநோட்டு மற்றும் பேனாவை எப்பொழுதும் பாக்கெட்டுகளில் வைத்துக் கொள்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். சிரிய முதல் பெரியது வரையிலான அனைத்து செயல்கள், யோசனைகளை ஞாபகக் குறிப்பு எழுதிக்கொள்வது, மறந்துவிட்டு யோசிக்கச் சிரமப்படும் நிலையில் நிரந்தரமான மன அமைதிக்கு ஒரு வகையில் உதவி செய்யும்.

## Govt. Ashram for Elders
## முதியோருக்கு அரசு ஆசிரமம்.

வயது முதிர்ந்த ஆதரவற்ற / வருமானமுள்ள முதியோர்களுக்கு அரசுத் துறையில் முதியோர் இல்லம், ஆசிரமம் நடத்துவது அவர்களுக்குக் கடைசி காலத்தில் செய்யும் பேருதவியாக அமையும்.

## To close the windows easily
## ஜன்னல் கதவுகளை எளிதாக மூடுவதற்கு

ஜன்னல் கதவுகளை எளிதாக மூடுவதற்கு தேவைப்படும் நீளத்தில் சிறு நைலான் கயிற்றை வீட்டின் உட்புறத்திலிருந்து இரு கதவுகளின் வளையங்களில் கட்டி வைக்கவும். மேற்படி ஒருபக்க கயிற்றையோ, அல்லது சேர்த்தோ இழுத்து முறையே ஒரு ஜன்னல் அல்லது இரண்டு ஜன்னல்களை மிக எளிதாக முடிக்கொள்ள இயலும்.

## To safeguard the learning capablity of ears
## காதுகளின் கேட்புத்திறனை பாதுகாக்க

எந்த நிகழ்ச்சியின் போதும் லவுட் ஸ்பீக்கர்களுக்கு நேரான திசையில் இருந்து காதுகள் ஒலி வாங்கும்படியாக அமரவோ நிற்கவோக் கூடாது. இது கேட்கும் சக்தியை விரைவாகக் குறைத்து விடும்.

## To remove the unwanted plants
## கட்டிடங்களில் கலைச்செடிகளை அகற்ற

சிமெண்ட் தரை மற்றும் சுவர்களில் உள்ள செடிகளை அகற்ற அவற்றை வெட்டிய பிறகு வேர் பகுதியில் ஆசிட் / சுடு நெருப்பு சாம்பல் விட்டு பழைய பாலிதின் / சிமெண்ட் சாக்கினால் ஓரிரு வாரத்திற்கு மூடி வைக்கவும். ஈரம் இல்லாமலிருந்தால் யூரியா தெளித்தும் அழிக்கலாம்.

## To avoid the children obesity
## குழந்தைகள் குண்டாவதைக் குறைக்க

குழந்தைகளின் மீது அதிக அன்பு, அக்கறைக் காட்டுவதாக எண்ணி அவர்களுக்கு அப்போதையத் தேவைக்கு அதிகமான உணவுகளை உண்ணக் கொடுத்து, ருசி மிகுதியால் உண்டு விடுகின்றன. இது குழந்தைகளைக் குண்டுகளாக்கி, சதைப்பிண்டம் நோஞ்சான் நோயாளியாக்கிவிடுகிறது. இது தற்கால, பிற்கால அவமானம், கிண்டல், உடல்-மன நோய்கள், பலவிதத் தகுதியின்மைகளுக்கு இட்டு செல்லும் எனவே அதிகப்படியான உணவு வழங்குவதென்பது பெரியோர்களே குழந்தைகளுக்கு விஷம் வைப்பதற்கு சமமானதாகும்.

## Basketball board in least expense
## குறைந்த செலவில் கூடைப்பந்து விளையாட்டு

வீடு, தோட்டங்களில் 10 அடி உயரத்திற்கு மேல் தென்னை/பனை மரம் இருந்தால் கிளாம்புகளுடன் சிறிய கூடைப்பந்து போர்டு செய்து மாட்டிக் கொள்ளவும். பந்தை வளையத்திற்குள் போடும் பயிற்சியை ஆர்வத்துடன் செய்யலாம். சிறந்த உடற்பயிற்சி கிடைத்துவிடும் இதைவிட சுவரில் ஒரு வளையம் மாட்டி கட்டம் வரைந்து விளையாடலாம்.

## To avoid the dashing troubles in crowded bus
## கூட்டமானப் பேருந்தில் அதிகம் இடிபடாமலிருக்க

கூட்டமானப் பேருந்துகளில் நிற்க வேண்டிய சூழ்நிலையில் நடுப்பகுதியில் நிற்பது ஓரளவுக்குத் தொல்லையில்லாதது. மேலும் கூட்டம் ஏறும்போது நாம் அதிகம் இடிபடவோ, நகர வேண்டியதோ குறையும். ஆனால் பலரும் நடுப்பகுதிக்குச் செல்ல விரும்புவதில்லை; இது மாற வேண்டும்.

## LED light - harm to eyes
## LED லைட்டுகள் கண்களுக்குத் தொல்லை

மின்மினுக்கும் கலக்கலான எலக்ட்ரானிக் LCD லைட்டுகளை அடிக்கடி அதிக நேரம் அருகில் பார்ப்பது கண்ணின் பலம் மற்றும் ஆயுளைக் குறைக்கும்.

## Making useful the waiting times
## காத்திருப்பு நேரங்களைப் பயனுள்ளதாக்குவது

உயர் அதிகாரிகள், முக்கியஸ்தர்களைச் சந்திக்க சில சமயங்களில் நெடுநேரம் காத்திருக்க வேண்டியதிருக்கும். அச்சமயங்களில் அதையே நினைத்துக் கொண்டிருந்தால் மிகுந்த வெறுப்பு, சோம்பல், அலுப்பு ஏற்பட்டு விடும்.

இதைத்தவிர்க்க அந்த நேரங்களை நல்லவிதமாய் பயன்படுத்திக் கொள்ளலாம். நல்ல நூல் ஒன்றை எடுத்துச் சென்று படிப்பது, வார, மாத பத்திரிக்கைகள் எடுத்துச் செல்வது, எழுத்து–கணக்கு வேலைகளை எடுத்துச் சென்று செய்துகொண்டிருப்பது போன்றவை மிகுந்தப் பயனளிக்கும்.

## A way to protect trees
## மரங்களைப் பாதுகாக்கும் ஓர்வழி

உயிர் மரங்களில் காணப்படும் வண்டு துளைகள், வேறு ஓட்டைகள், துவாரங்கள், தெரிப்புகள் இவற்றால் மரங்களின் வலிமை பலன் குறைந்துவிடும். இதற்கு மேற்படி இடங்களில் மாட்டுச் சாணத்தை வைத்து அடைத்துவிட்டால் மேற்படி குறைகளின் பாதிப்புகள் குறைந்து மரம் பலமாகும்.

## Attachment of roof to the hospital stretcher
## மருத்துவமனை ஸ்டிரெக்சருக்கு மேற்கூரை இணைப்பு

மருத்துவமனைகளில் ஒரு கட்டிடத்திலிருந்து மற்றொரு கட்டிடத்திற்கு நோயாளிகளை ஸ்டிரெக்சரில் கொண்டுபோகும்போது சூரிய வெப்பம், மழை, பனி போன்றவை படாமலிருக்குமாறு நோயாளிக்கு நன்கு மேலே (சுமார் 2 அடி உயரத்தில்) ஸ்டிரெக்சர் பரப்பிற்குத் தக்க கூரை முறை அமைப்பது நாகரிக மேன்மையாகும்.

## The importance of spectacles and glasses
## மூக்குக் கண்ணாடியின் அவசியம்

அதிக வெப்பம், குளிர், புகை, தூசு, விபத்து போன்ற வைகளிலிருந்து கண்களை பாதுகாக்க குறிப்பாக வெளி நடமாட்டத்தின்போது அனைவருக்கும் கண்ணாடி அவசியம் தேவை.

## The ironed costly dresses - good & bad
## நேர்த்தியான, அழகாக அயன் செய்யப்பட்ட உடைகள் - நன்மை, தீமை

இவை கம்பீரம், மதிப்பு, தைரியம், நம்பிக்கை, ஒழுக்கம் போன்றவற்றை அதிகப்படுத்தும். அதேபோல இவ்வாடைகள் அணிந்திருக்கும் வேளையில் உடையின் மிடுக்கு குறையாமல் பாதுகாக்க பலரால் இயல்பான உடல் அசைவுகளுடன் இருக்க முடிவதில்லை. சரியான முழு சுவாசம் கூடக் குறையலாம். இதனால் சில மணி நேரத்திற்குப் பிறகு உடல் அயர்வு, வலி போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு. எனவே இம்மாதிரியான உடைகளை மிடுக்கு குறையாதபடி சற்று கூடுதல் தொளதொளப்புடன் தைத்துக் கொள்வது நன்மை தரும்.

## New uses of palm leaf's centre portion
## பனைமட்டைக் காம்பின் புதிய உபயோகங்கள்

நன்கு முற்றிய பனைமட்டைக் காம்புகளை இருபுறமும் கருக்கு வெட்டி நன்கு காய வைத்தபிறகு இரண்டு முறை பெயிண்ட் அடித்துவிட்டால் சுமார் 100 ஆண்டுகள் வரை கெடாமல் இருக்கும். இதை பர்னிச்சர் மரசாமான்கள், அழகுப்பொருட்கள், வேலிகள் போன்றவைகள் செய்யப்பயன்படுத்தலாம்.

## A simple social service
## ஒரு எளிய சேவை

பொதுக்கழிவறைகளுக்கு சிறுநீர் கழிக்கப் போகிறவர்கள் அங்குள்ள கழிப்பானில் ஏதேனும் மலம் ஒட்டியிருந்தால் அதன்மீது தண்ணீர் விட்டு பிறகு சிறுநீர் கழிக்கவும். அல்லது கழிக்கும் சிறுநீரையாவது ஒட்டியிருக்கும் மலப் பிசுக்குகள் மீது வேகமாக விட்டு கரைத்து விட்டு பின்னர் தண்ணீர் விட்டு வரவும். இந்திய பொதுக்கழிவறைகளில் முழுத்தூய்மை என்பது உலகம் உள்ள வரையிலும் வரவே வராது என்கிற காரணத்தினால் இப்படியெல்லாம் செய்வதும் ஒரு சேவைதான். இது சற்று சிரமம்தான் என்றாலும். செலவில்லாமல் ஒரு சமூகப்பணி செய்த பலன் கிட்டும்.

## Other uses of sand
## மணலின் வேறு பயன்பாடுகள்

சில வேலைகளைச் செய்யும்போது மனிதர்கள் அழுத்தி அமுக்கிப் பிடிப்பது போன்றவற்றிற்கு நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அச்சமய மனிதத்தேவை, கூலிசெலவானது குறைக்கிறது.

## Other utilization of military personnels
## இராணுவத்தினரின் வேறு உபயோகங்கள்

இராணுவத்தினரின் ஆட்பலம், வலிமை, ஒழுக்கம் போன்றவைகளை போர்களுக்காக, ஆபத்து கால மீட்பு பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தக் காத்திராமல் வேறு நல்ல பணிகளுக்குப் பயன்படுத்தலாம் பொதுநல, அரசு கட்டுமான, அபிவிருத்திப் பணிகளிலும் மிக நன்றாகப் பயன்படுத்தி திட்ட செலவை மிகக் குறைத்து சிறப்பானப் பல காரிய}கள் செய்திட முடியும்.

## New use of palm leaves
## பனை ஓலையின் புதிய பயன்பாடு

பனைமரத்தின் மட்டைகள் முன்பு வீடுகளுக்கு கூரை போட பயன்பட்டு வந்தது. தற்சமயம் இந்த வகை உபயோகம் பெரும்பகுதி நின்றுவிட்டது. விசிறி, கூடை, சில அலங்காரப்பொருட்கள் செய்யப்பட்டன. இப்போது அதற்கும் ஆதரவு மிக்குறைந்து விட்டது. எனவே வீணாகிக் கொண்டிருக்கும் ஒரு இயற்கைப் பொருளை தற்காலத்திற்கும் நிரந்தரப் பயன்பாட்டுக்கும் உகந்ததாக்க ஒரு யோசனை.

ஐஸ் கிரீம் வகைகள், சுண்டல் போன்ற தின்பண்டங்கள், மிக்சர், சிலவகை இனிப்புகள் இவைகளை எடுத்து சாப்பிடுவதற்கு பல வேறு அளவுகளில் மட்டையாளான சிறு கரண்டியாக பயன்படுத்துவதற்கு தயார்செய்து கொள்ளலாம். இம்முறையில் பனை மட்டையின் ஓலைக்கு ஒரு புதிய பொருளாதார மதிப்பு கிடைக்கும்.

## For the maximum use of the contents in the tubes of tooth paste, etc.
## பற்பசை, இதர டியூப்களிலுள்ளப் பொருட்களின் அதிகபட்ச உபயோகத்திற்கு

பிளாஸ்டிக் டியூப்களில் வரும் பற்பசை மற்றும் இதரப்பொருட்கள் உபயோகித்து தீர்ந்தபின் வாய்பகுதிக்கு அருகில் டியூப்பை இரண்டாக வெட்டி அதில் உள்ள பொருளை மேலும் சில தடவை உபயோகிக்க முடியும்.

## Cow urin - dung - insecticide, manure
## பசுமூத்திரம், சாணி - கிருமிநாசினி, உரம்

பசுமூத்திரம், மற்றும் சாணியை தேவையான அளவு தண்ணீரில் கலந்து சுற்றுப்புறம் பாதிக்கப்படாமல் தாவரங்களுக்கு இயற்கை கிருமி நாசினியாகப் பயன்படுத்தலாம்; மேலும் அவை உரமாகவும் மாறிவிடும்.

## To reduce weight and the shortage of space in travel bags
## பயணப் பெட்டியின் எடை, இடம் பற்றாக்குறையைக் குறைக்க

ஓரிரு நாட்கள் வெளியூர்கள் மற்றும் பணிகளுக்காகச் செல்லும் ஆண்கள் எடுத்துச் செல்லும் பேக்கில் போதுமான இடமில்லாவிடில் துண்டு போர்வை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை; ஒரு காட்டன் கைலி போதுமானது. அதை துண்டாக உடலின் மேற்பகுதியில் மாட்டிக் கொள்ளும் போர்வையாக வழக்கமாக இடுப்பில் உடுத்த என பலவாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## For the safety of women
## பெண்களின் பாதுகாப்பிற்கு

பெண்களுடைய கைப்பையில் மிளகாய்பொடி, சிறிய கத்தி, ஆணி அல்லது கோணூசி போன்ற சிறு ஆயுதம் வைத்துக்கொள்வது தைரியத்துடன் பாதுகாப்பைத் தரும்.

## Big signal roundals
## பெரிய அளவு கலர் விளக்கு சமிக்ஞை

இரயில்வே கலர் லைட் சிக்னல் முறையில் தற்போதுள்ள லைட் ரவுண்டால் கண்ணாடி அளவை சற்றுப் பெரியதாக்கி கூடுதல் எல்.இ.டி. லைட்டுகள் வைத்தால் மிக அதிக பாதுகாப்புடன் கூடுதல் வேகத்தில் இரயில்களை இயக்க முடியும்.

## Easy physical exercise from bus travel
## பேருந்தினால் எளிதான உடற்பயிற்சி

நல்ல திடகாத்திரமானவர்கள் இந்தியச் சாலைகளில் செல்லும் பேருந்துகளில் பயணம் செய்யும்போது பின் இருக்கைகளில் அமர்ந்தால் எவ்வித சிரத்தையுமில்லாமல் கிட்டத்தட்ட குதிரையில் செல்வதற்குச் சமமான உடற்பயிற்சி பெறலாம். இது ஒரு எளிய இயற்கையாக அமைந்துவிடும் லாபமாகும். பயணத்தோடுச் கூடவே இலவச உடல்வலிமையும் கிடைக்கப்பெறும்.

## To avoid the outside hanging passengers in buses
## பேருந்துகளில் தொங்கும் பயணிகளைத் தவிர்க்க

முன்பு குதிரை வண்டிகளில், பயணம் செய்பவர்கள் விழுந்து விடாதபடி குறுக்காக கம்பியை மாட்டும் முறை இருந்தது. இம்முறையில் பேருந்து வாசற்படிகளின் வலுவான கொக்கி கம்பி நீளமான பேருந்து வாசற்படிகள் குறுக்காக மாட்டிக்கொள்ளும் கம்பி முறை வரவேண்டும். இதன் மூலம் கம்பி பகுதிக்கு வெளியே எவரும் தொங்கிப் பயணம் செய்ய இயலாது; விபத்துக்களை குறைக்க முடியும். நகரப் பேருந்துகளில் கதவுகளைப் பொருந்தினால் அவசர உலகத்திற்கும் பொருந்தாது.

## A decent method of bus operation
## பேருந்துகளை நிறுத்த, புறப்படச்செய்ய நாகரீகமுறை

பேருந்துகளில் நடத்துனர் விசில் பயன்படுத்துவதுடன், சில இடங்களில் நடைமுறையில் இருக்கும் கயிறு இழுப்பதன் மூலம் ஓட்டுனருக்கு தெரிவிக்கும் முறையை அனைத்து பகுதி பேருந்துகளுக்கும் கொண்டுவர வேண்டும். இதன் மூலம் விசில் அடித்து கடும் சப்தம் எழுப்பும் துன்பமான முறையைக் குறைத்துக்கொள்ளலாம்.

## To strengthen the Table of cooking gas cylinder
## சமையல் கேஸ் சிலிண்டர் குழாயை வலிமைப்படுத்த

சமையல் கேஸ் சிலிண்டரிலிருந்து வரும் ரப்பர் குழயின் மீது ஆயில் பெயிண்ட் அடித்து வைத்தால் நெடு நாளைக்குப் பயன்படும்.

## Taking of Impression of keys
## சாவியின் அச்சுகளை எடுப்பது

முக்கியமான சாவிகளின் அச்சுகளை சோப்பு, அரக்கு, மெழுகு இதன் மூலம் போன்றவைகளைப் பயன்படுத்தி எடுத்து வைத்துக்கொள்வது பேப்பரில் வரைந்து வைப்பது நல்லது. சாவிகள் காணாமல் போகும் நிலையில் எளிதாக டூப்ளிகேட் சாவி போட்டுக்கொள்ளலாம்.

## Garden decoration without expense
## செலவில்லாத் தோட்ட அலங்காரம்

பயனற்றுப்போன நாட்டுக் கூரை ஓடுகளைக் கொண்டு தோட்டச்செடிகளைச் சுற்றி வட்டமாக அடுக்கி அதன் மீது நிறசாயமடித்து அலங்காரம் செய்து தோட்டத்தை அழகாக்கலாம்.

## Manure of septic tank
## செப்டிக் டேங்க் - உரம்

தோட்டப்பகுதியில் இடம் உள்ளவர்கள் செப்டிக் டேங்க் கழிவுகளை தங்கள் தாவரங்களுக்குப் பயன்படுத்தி சில ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உரமாக்கி பயன்பெறமுடியும் ஒரு சில நாடகளுக்கு அடிக்கும் நாற்றத்தைத் தவிர்க்க கழிவுகளின் மீது மணலை நிறைய கொட்டி மூடவேண்டும்.

## Special counters
## சிறப்பு கவுன்டர்கள்

தினசரி அதிக கூட்டமுள்ள பாங்க், இரயில்வே மற்றும் சில முக்கிய அலுவலகங்களில் கூடுதல் கட்டண சேவையுடன் கவுண்டர்கள் அமைத்தால் அவசரமானவர்களுக்கு வசதி மிகுந்தவர்களுக்கு வசதியாக அமையும் அத்துடன் நிர்வாகத்திற்கு கூடுதல் வருமானம் கிடைக்கும்.

## Small doors at house entrances
## வீட்டு வாசல்களில் குட்டைக் கதவுகள்

தோட்டப்பகுதியில் இருக்கும் வீடுகள், சிறு குழந்தைகள் உள்ள வீடுகளின் தெரு, கொல்லைப்புற வாசற்பகுதியில் பெரிய கதவுகள் தவிர சுமார் 1 ½ அடி உயர சிறு கதவுகள் அமைத்துக்கொள்வது நல்லது. வீட்டிற்குள் பாம்பு, விஷவண்டு–பூச்சிகள் வருவதைக் கட்டுப்பத்தலாம். குழந்தைகள் வாசற்படிகளில் தவறி விழுந்து விடுதல், வெளியே மண் பகுதிக்குச் சென்று விடுவது போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

## Supply of Binacluar to Railway Drivers and Stations
## இரயில் ஓட்டுனர்கள் மற்றும் நிலையங்களுக்கு தொலைநோக்கி வழங்குவது

இரயில்வேயில் தொடர்வண்டி ஓட்டுனர்களுக்கு நல்ல தூரத்திலேயே சிக்னல்களைப்பார்த்து வண்டிகளின் பாதுகாப்பான, வேகமான இயக்கத்திற்கு உதவுவதற்குப் பைனாகுலர் தொலைநோக்கி பயன்படும்.

அதேபோல இரயில்நிலைய அதிகாரி மற்றும் ஊழியர்கள் இரயிலின் வருகை, தூரத்தில் இரயில்நிலைய தண்டவாள எல்லைகளில் காணப்படும் இடையூறுகள், சிக்னல் மற்றும் இதர இரயில்வே உடைமைகளின் நிலை போன்றவற்றை உறுதிபடுத்திக் கொள்ளலாம்.

## Doing works tension free
## டென்சன் இல்லாமல் வேலைகளைச் செய்வது

செய்ய வேண்டிய வேலைகளை அவ்வப்போது எழுதி வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாகச் செய்து முடித்தபின் அதன் மீது ஒரு கோடு போட்டுக்கொள்வது தேவையற்ற டென்சன்களைக் குறைக்கும். ஞாபக மறதிக் காரர்களுக்கு இது நிச்சயம் உதவியாயிருக்கும்.

## Drink water in this method
## தண்ணீரை இப்படி குடிக்கவும்

தண்ணீரை சற்று நேரம் வாயில் வைத்துச் சுவைத்துக் குடிக்கும் பழக்கத்தைக் கொண்டால் முகப் பொலிவு, கண் சக்தி கூடும்; சளித்தொல்லை உடல் சூடு குறையும்.

## A method to prevent the wastage of water
## தண்ணீரை வீணாக்காமல் இருக்க ஓர் முறை

தண்ணீர் குழாயைத் திறந்து வைத்துக்கொண்டு முகம் கழுவுதல், பல் துலக்குதல் போன்றவைகளைச் செய்து நிறைய தண்ணீரை வீணடிக்கக்கூடாது. ஒரு கப்பில் பிடித்து வைத்துக்கொண்டு கழுவ வேண்டும் அல்லது குழாயை லேசாகத் திறந்துகொள்ள வேண்டும்.

## To escape from stray dogs and rowdies
## தெரு நாய்கள், ரவுடிகளிடம் தப்பிக்க

தெரு நாய்கள் கடிக்க ஓடி வந்தால் அருகிலுள்ள சுவர், மரத்தில் ஏறிக்கொள்வது, பக்கத்திலுள்ள வீடு போன்ற இடங்களில் புகுந்து கொள்வது ஆபத்திற்கு அவசியமாகிறது. ஏனெனில் தெருநாய்களுக்கு பாதுகாப்பு உள்ளது மனிதர்களுக்குத்தான் இல்லை. இதே நிலையை ரவுடிகள், கொடியவர்கள் தாக்குதலின் போதும் கடைபிடித்துக்கொள்ளலாம்.

## To get the full benefit of street lights
## தெருவிளக்கு வெளிச்சம் குறையாமல் தெரிய (இருக்க)

தெருவிளக்கு, வெளிவிளக்குக் கூண்டுகளில் கீழ்புறமுள்ள ஒளி ஊடுருவக்கூடிய பிளாஸ்டிக், கண்ணாடி போன்ற அடைப்புப்பகுதியை வலை போன்ற அடைப்பால் மாற்றம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அதில் தங்கும், இறந்து போகும் சிறு வண்டுப்பூச்சிகளால் மறைக்கப்படும் ஒளி தொடர்ந்து கீழே விழும்.

## To Change the different mentalities of people of various religions
## வெவ்வேறு மதங்களைச் சார்ந்த மக்களின் வேறுபாட்டு மனநிலைகளை மாற்ற

ஒரு எல்லையிலேயே அனைத்து மதத்தினரின் வழிபாட்டுத் தலங்களைத் தனித்தனியாக அருகருகில் அமைத்து சில சட்டட்திட்டங்களுடன் வழிபாடுகள் நடைபெற வேண்டும். இதன் மூலம் மதவிரோத செயல்கள் குறைந்து, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அன்புநிலை உயரும். ஒரு மதத்துக்காரர் மற்றமத வழிபாட்டுத்தலங்களுக்கு சென்று வழிபட அனுமதிக்கலாம். இதன் மூலம் மத நல்லிணக்கம் உருவாகும்.

## To know the decency of a family
## ஒரு குடும்பத்தின் நாகரீகத்தை அறிய

ஒரு சில விதிவிலக்கு போக பெரும்பாலானக் குடும்பங்களின் நாகரீகம், தூய்மை, பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ள ஒரு சிறந்த வழி உண்டு. அவ்வீட்டின் கழிப்பறைகளின் நிலை, தூய்மை மற்றும் வீட்டினுள் இருக்கும் நிரந்தர மணம் போன்றவைகள் விடைகளாக இருக்கும்.

## Belly reduction with additional benefits without exercise instrument
## உடற்பயிற்சி பொருட்கள் இல்லாமல் கூடுதல் பயன்களுடன் தொப்பைக் குறைப்பு

தொப்பையைக் குறைக்க இரு கைகளாலும் வயிற்றை அனைத்து பக்கவாட்டிலும், மேலும் கீழுமாக பல முறை அசைத்து லேசாகப் பிசைந்து வர பயனிருக்கும். இது மேலும் கைகள், மார்பு மற்றும் பல உடல் பாகங்களுக்கு கூடுதல் உடற்பயிற்சியாகிறது. இம்முறையை சாப்பிட்ட உடன் செய்யக்கூடாது.

## The words spelled on joining of both lips
## உதடுகள் சேர்ந்து ஒலிக்கும் வார்த்தைகள்

தமிழில் மெய்யெழுத்துக்கள் ம், ப், ஆகிய இரண்டு அதனைச்சார்ந்த உயிர்மெய் எழுத்துக்கள் இருபத்தி நான்கு எழுத்துக்கள் மற்றும் ஆங்கிலத்தில் **B,F,M,P,W** ஆகிய ஐந்து எழுத்துக்களையும் உச்சரிப்பதற்கு கீழ் மேல் உதடுகள் சேரவேண்டும். உச்சரிப்பதற்கு இரண்டு உதடுகளும் சேருவதற்கு சிலருக்கு பற்கள் தடையாக இருக்கும்போது இந்த எழுத்துக்கள் இடம் பெற்றுள்ள வார்த்தைகளை தெளிவாக, அழகாக உச்சரிக்க இயலாது. மற்ற மொழிகளிலும் இப்படியான எழுத்துக்கள் நிச்சயம் இருக்கும்; எனவே பற்களைக் காலத்தே சரிசெய்துகொள்வது சாலச்சிறந்தது.

## The danger of silky floor
## வழுவழுப்புத் தரையின் ஆபத்துகள்

எலும்பு முறிவு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருப்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வழவழப்புத் தரையில் வழுக்கி விழுந்து அடிபட்டவர்கள். குறிப்பாக ஈரத்தரை மற்றும் வழவழப்பான பாசி பிடித்த பாத்ரூம்களில் வயதானவர்கள் விழுந்து கைகால்கள் முறித்துக் கொள்வது சர்வசாதாரணம். எனவே இனிவரும்காலங்களில் பாதுகாப்பான மனிதவாழ்க்கைக்கு இடையூறான வழுக்கல் தரைகளுக்குப் பதிலாக சற்று சொர சொரப்பானத் தரைகளை (டைல்ஸ்) போட்டுக் கொள்வது அறிவுப்பூர்வமானச் செயலாகும். வயதானவர்கள் மட்டுமன்றி மற்றவர்களும் வழவழப்புத் தரையில் மிக கவனமானச் சிரத்தையுடனேயே நடக்க வேண்டியிருக்கிறது; இதுவாழ்க்கையின் அனாவசியமான மெனக்கெடு ஆகும்.

## Typriting could be learned in this method also
## தட்டச்சு முறை இந்த வழியிலும் கற்றுக்கொள்ள இயலும்

இரு கைகளிலுள்ள பத்து விரல்களை எந்தெந்த எழுத்துக்கள், பட்டன்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதை எழுதி வைத்துக் கொள்ளவும். ஆரம்ப காலத்தில் மெல்லமாக அந்தந்த எழுத்துக்களுக்கு அந்தந்த விரல்களை மட்டுமே பயன்படுத்திப் பழகவும். இம்முறையில் விரைவாக வேகமாக தட்டச்சு செய்யும் முறையை எளிதில் கற்றுக்கொள்ள முடியும்.

## Easy movement of car into the portigo
## வீட்டிற்குள் இலகுவாக கார் போய் வர

வீடு மற்றும் இதர இடங்களில் உள்ளே கார் செல்லும் பாதை பொதுவாக அவற்றிற்கு நேராக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கார்களை உள்ளே கொண்டு செல்வதில் சற்று சிரமம் இருக்கும்; அதிலும் அகலக் குறைவான சிறு சாலை, தெருவில் மிகவும் சிரமம். எனவே மேற்படி கார் செல்லும் பாதையைச் சற்றுப் பக்கவாட்டிலிருந்துச் செல்லுமாறு அமைத்துக்கொண்டால் வாகனத்தை எளிதாக உள்ளே கொண்டுசெல்ல இயலும். இதற்கு வாசலைச் சற்று அகலமாக அமைக்கவும்.

## A method in clean the house
## வீடு சுத்தம் செய்வதில் ஒரு முறை

வீடு கட்டிடங்களில் ஒட்டடை அடிக்கும்போது ஒட்டடைக்குச்சியால் முதலில் மெதுவாக தொங்கும் ஒட்டடைகளை சுற்றிசுற்றி எடுத்துவிட வேண்டும். பின்னரே சிறு தூசிகளை வேகமாக அடித்து சுத்தம் செய்ய வேண்டும். இல்லையேல் ஒட்டடைகளின் கணிசமானப் பகுதி சுவர், சீலிங் போன்றவற்றில் ஒட்டிக்கொண்டு கருப்பாக்கி அழுக்காகிவிடும்.

## 2 to 3 feet cement floor surround the house compound
## வீடு கட்டிடங்களின் வெளிச்சுவரை ஒட்டி 2/3 அடி சிமெண்ட் தரை

இவ்வாறு செய்து கொண்டால் பல நன்மைகள் கிடைக்கும்.

1. வெளிச்சுவர்கள் சேதமடைவதிலிருந்து தடுக்கபடும்.
2. சுற்று நடைபாதை
3. பூச்சிகள் களைச்செடிகள் வராது
4. வீடுகளுக்கு கூடுதல் தோற்றப் பொலிவு, மதிப்பு
5. உட்காரும் பெஞ்சுகளை அமைத்துகொள்ள தரையும் சாய்மானத்திற்கு சுவரும் கிடைக்கிறது.

## Need not raise the inner sand area level of house on par with entrance
## வீட்டின் வாசல் உயரத்திற்கு உட்புற மண் பகுதியை உயர்த்த வேண்டியதில்லை

இதற்குப்பதிலாக உட்புறம் சற்றுச் சரிவாக இறங்கு நிலையில் அமைத்து உட்புற மழைநீர், கழிவு நீரை ஓரமாக வெளியே கொண்டு செல்ல முடியும்.

## To remove the block in the wash basin tube
## வாஷ் பேசனில் குழாய் அடைப்பை நீக்க

சில இடங்களில் அடுப்படி வாஷ் பேசின் குழாய்க்குள் நத்தை, மரவட்டை போன்ற பூச்சிகள் அவ்வப்போது தங்கி கழிவுத் தண்ணீர் ஓட்டத்தை நிறுத்தி அவை பேசனில் தேங்கி நிற்கும் நிலை ஏற்படும். அதற்கு கீழேயுள்ள பிளாஸ்டிக் குழாய் தாங்கும் அளவிற்கு வெந்நீர் வைத்து ஊற்ற வேண்டும். குழாய்க்குள் இருக்கும் மேற்படி தொல்லைகள், பேசனின் அழுக்குகள் தொலையும் வெந்நீருடன் சிறிது பிளீச்சிங் பவுடரையும் சேர்த்துக்கொள்ளலாம்.

## A necessity to iron workshops
## இரும்புப் பட்டறைகளுக்கு ஒரு கட்டாய தேவை

இரும்புவேலை செய்யும் பல பட்டறைகளில் சிறு இரும்புத்துண்டுகளை வெட்டும் சமயங்களில் வெட்டப்பட்டத் துண்டுகள் வேகமாகச் சிதறி அங்கிருப்பவர்களுக்கு அடிபட்டு பெரிய காயம் ஏற்படுத்துவது அவ்வப்போது நடைபெறுவது உண்டு. மேலும் இரும்புத் துண்டுகள் தூரத்தில் விழுந்து தேடுவது, காணாமல் போவது, சாலையில் போவோர் மீது அடிப்பது போன்றவையும் நடக்கும். இதைத் தடுக்க மிகக் கவனமாக நேரம் அதிகம் எடுத்து வெட்டுவர்.

இவற்றை மிக எளிதாகச் சமாளித்து சாதாரணமாகச் செய்ய பலகைக் கட்டை போன்ற சிறுத் தடுப்பு ஒன்றை துண்டு வெட்டப்படும் பக்கத்தில் அருகில் வைத்துக் கொள்ளவும். இது ஒரு சில இடங்களில் ஏற்கனவே நடைமுறையில் இருப்பின் அனைத்துப் பட்டறைகளிலும் கட்டாயம் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்று!